**தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் - 2020**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது

அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- நிறுவகம் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- நிறுவகத்தின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவையான மீள் மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கோரிக்கை விடப்பட்டள்ளதுடன், உரிய நடவடிக்கைககள் இன்னும் மேற்கொள்ளப்படாமையினால் கணக்கு கூற்றுக்களில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. அந்த மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததும் உடனடியாக | தேவையான மீள் மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கோரிக்கை விடப்பட்டள்ளதுடன், உரிய நடவடிக்கைககள் இன்னும் மேற்கொள்ளப்படாமையினால் கணக்கு கூற்றுக்களில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. அந்த | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததும் உடனடியாக தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | நிறுவனத்திற்கு எதிராக தொழில் நீதிமன்றத்தில் வழக் கொன்று தொடரப்பட்ட போதிலும், நியம இலக்கம் 08 இன் பிரகாரம் அறிக்கையிடல் திகதியில் உள்ளவாரு ஏற்பட்டுள்ள நிகழத்தக்க பொறுப்புக்களின் தன்மை தொடர்பான விடயங்களை உள்ளடக்கி விபரமான நடைமுறை பிரயோக ரீதியில் காணப்படுமாயின் அது நிதி தாக்கத்தின் மதிப்பீடு மற்றும் செலுத்த வேண்டிய காலம் மற்றும் மீளழிப்புச் செய்யக் கூடியதா என்பது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய கணக்கீட்டு வெளிப்படுத்தல்கள் எதிர் வரும் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகளில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | நிறுவனத்திற்கு சொந்தமான 01 ஹெக்டேயர் அளவான அகலவத்தை பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணியின் கிரய பெறுமதி ரூபா 615,000 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும், அந்த காணியின் நியாயமான பெறுமதியை நிதிக் கூற்றுக்ககளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததும் உடனடியாக தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கலைக்கப்பட்ட தேசிய ஒழுங்கிணைப்பு அரச கரும மொழிகள் சமூக முன்னேற்ற மற்றும் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,290,285 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட வருட காலமாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நிதிக் கூற்றுக்களில் பெற வேண்டியமீதியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | 2018 ஆம் ஆண்டில் முன்னால் காணப்பட்ட அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய பொறுப்புக்களை தீர்ப்பதற்காக நிறுவனத்திற்கு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரு கிடைக்க வேண்டிய மீதியாக 2019 ஆம் ஆண்டில் கிடைத்த தொகை குறைக்கப்பட்டதன் பின்னர் மேலும் பெற வேண்டியதாக காணப்பட்ட மீதி இதன் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. | மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2. செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதி ரூபா 13,524,317 ஆக இருந்ததுடன், இதில் ரூபா 11,335,467 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுவதுடன், அந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதியை செலுத்துவதற்காக தேவையான நிதி ஏற்பாடு கிடைக்கப் பெறாமையின் அடிப்படையில் தொடர்ந்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. | மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனச் சட்டத்தின் (ஊ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 62,204,717 ஆன மீதி முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று குறுங்கால மற்றும் நீண்டகால பிணைகளில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இத்தொகையை முதலீடு செய்யாமல் வருடக் கணக்கில் பொதுவான சேமிப்புக் கணக்கொன்றில் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் அப்பணத்தை நிலையான வைப்பொன்றில் முதலீடு பெற்றுக்கொள்ள இருந்த அதிகளவிலான வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்களில் முதலீடுகளினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | குறுங்கால நீண்டகால பிணையங்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571(2) மற்றும் (3) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்குனரால் வைப்புச் செய்யப்பட்ட மீளச் செலுத்த வேண்டிய ரூபா 870,600 ஆன வைப்பு மீதயில் 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 107,000 ஆக இருந்தது. இவ் வவைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571(2) மற்றும் (3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிஷ குடியரசின் தாபன | முறையான ஒழுக்காற்று பரிசோதனை தாமதமாக அல்லது ஒழுக்காற்று அதிகாரி தீர்மானித்த | இரண்டாம் மொழி செயற்திறனை வழங்குவதற்கு அரசாங்கத்தின் | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| விதிக் கோவையின் XIVIII அத்தியாயத்தின் 21.1 ஆம் பிரிவு மற்றும் 23.2 ஆம் பிரிவு. | கால எல்லையில் நடாத்தி அதன் அறிக்கை பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர் சகல குற்றங்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டமை தீர்மானிக்கப்படுமாயின் மீண்டும் சேவையில் அமர்த்தும் கட்டளையும், வேலை நீக்கம் செய்யப்பட்ட காலத்திற்கு செலுத்தாதிருந்த சம்பளம் எதுவும் காணப்படுமாயின், அவற்றை செலுத்துமாரும் கட்டளையிட வேண்டியிருந்த போதிலும், அந்த பணிகளை நிறைவேற்றாமல் வேலை நீக்கத்திற்கு உட்பட்ட பணிப்பாளர் நாயகத்திற்கும் நிர்வாக உத்தியோகத்தரும் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்ததுடன், வேலை நீக்கத்திற்கு உட்பட்ட காலத்திற்குரிய சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 666,026 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்கள் 15 இலட்சம் பேர்கள் அளவில் காணப்படுவதுடன், இந்த பயிற்சியை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆரம்ப சந்தர்ப்பம் முதல் சேவையில் ஈடுபட்டிருந்த அனுபவம் உள்ள பணிப்பாளர் நாயகம் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் 2020.01.31 அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் அடிப்படையில் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டு உரிய சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. புதிய பணிப்பாளர் சபை அமைச்சரினால் சனாதிபதியின் பரிந்துரையின் அடிப்படையில் 202105.1 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தது பணிப்பாளர் சபைக் கூட்டம் 2021.07.15 ஆம் திகதி நடைபெற்றது. கூட்டப்பட்ட முதலாவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இரண்டு உத்தியோகத்தர்களும் மீண்டும் சேவையில் அமர்த்துவதற்குரிய சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அது பணிப்பாளர் சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந் | எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தது. | |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 13.2 ஆம் பந்தியின் மூலம் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமானம் 770(4) | மோட்டார் வாகனம் ஒன்று முச்சக்கர வண்டியொன்று பல வருட காலமாக சேவையில் ஈடுபடுத்தப்படாமல் நிறுவன சுற்றாடலில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய பயன்படுத்து முடியாதுள்ள வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | இந்த இரண்டு வாகனங்களில் ஏதாவது தொழில்நுட்ப கோளாறுகள் காணப்பட்ட போதிலும், பழுது பார்த்து பயன்படுத்துவதற்கு முடியுமாக காணப்பட்டது. மேலும் வாடகை அடிப்படையில் நிறுவனத்தினால் பெறப்பட்டுள்ள இரண்டு வாகனங்களும் வாடகை உடன்படிக்கைக் காலமும் 2022 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் முடிவடைவதற்கு உள்ளமையினால் காணப்படுகின்ற வாகனங்களை பழுதுபார்த்து பயன்படுத்துதல் வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2018 யூலை 18 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் II ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெறப்படாமல் நிறுவனத்தில் பதவி அணியினரை ஆட்சேர்த்தல் சம்பளம் மற்றும் படிகள் தீர்மானித்தல் தவிர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த ஆலோசனைகளுக்கு இனங்காணமல் மீளாய்வாண்டின் போது 11 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு ரூபா 1,726,853 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | நாட்டின் ஒட்டுமொத்த அரச உத்தியோகத்தர்களுக்காக இரண்டாம் மொழி கற்பித்தல் நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக போதியளவான உத்தியோகத்தர்கள் அளவொன்று நிறுவனத்தில் காணப்படவில்லை. அதனால் நிறுவனத்தின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கான தேவைப்பாட்டின் பேரில் அடிப்படையில் உரிய உத்தியோகத்தர்கள் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தற்காலிமாக சேர்க்கப்பட்டு சேவையை பெற்றமைக்காக சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,946,868 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,006,172 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,940,696 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 55,678,813 இனால் குறைவடைந்த போதிலும், நிர்வாக செலவினம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தும் செலவினம் ரூபா 61,521,410 இனால் குறைவடைந்தமை. இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2019 ஆம் ஆண்டின் போது பல்நோக்கு அச்சிடல் இயந்திரம் ஒன்று ரூபா 2,024,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த அச்சிடல் இயந்திரத்தின் கொள்வனவின் ஆரம்ப நோக்கம் 50,000 – 100,000 வரையிலான சான்றிதழ் பத்திரங்கள் அளவொன்றை அச்சிடுவதாக இருந்த போதிலும், நிறுவனத்தின் தேவைக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் தொழில்நுட்ப மாதிரிகள் தயாரிக்கப்படாமல் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையின் காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது வெளி நிறுவனத்தில் இருந்து 38,000 சான்றிதழ் | அச்சிடல் இயந்திரத்தை கொள்வனவு செய்த சந்தர்ப்பத்தின் போது காணப்பட்ட நிறுவன தேவை சந்தை நிலைமையை கருத்தில் கொண்டு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இந்த அச்சிடல் இயந்திரம் தற்போது நிறுவனத்தின் அச்சிடல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. நிறுவனத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சகல அச்சிடல் நடவடிக்கைகளும் இந்த இயந்திரத்தில் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதில்லை. | நிறுவனத்தின் தேவையினை சரியான பிரகாரம் இனங்கண்டதன் பின்னர் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பத்திரங்களை அச்சிடுவதற்காக ரூபா 1,026,000 தொகையான மேலதிக கிரயமொன்று செலவிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிறுவனத்தின் தேவையினை இனங்காணாமல் அகலவத்தை பயிற்சி நிலையத்திற்கு 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 295,924 பெறுமதியான இரண்டு சலவை இயந்திரங்கள் ஆயுட் காலம் முடிவடையும் வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிறுவனத்திற்கு சொந்தமான 2 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது பயன்பாட்ற்கு எடுக்கப்படாமல் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. | இதில் ஒரு இயந்திரம் அகலவத்தை பயிற்சி நிலையத்தின் உத்தியோகபூர்வ விடுதிக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டுள்ளதுடன், மற்றைய இயந்திரத்திற்காக தேவையான பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. சாரதி பதவிக்கான வெற்றிடங்கள் காணப்பட்டமையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பிரகாரம் தேவையினை இனங்கண்டு கொள்வனவு செய்தல் மற்றும் வாகனங்களை பயன்படுத்துவதற்கான தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |